செய்தி வெளியீடு எண் .72/2017 நாள் 15.11.2017

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து பலத்த மழை பெய்தது. வடகிழக்கு பருவ மழை துவங்குவதற்கு முன்னரே கன மழையை எதிர்கொள்ளவும், மழையினால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொது மக்களை பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் குடிநீரின் தரத்தினை தொடர்ந்து பராமரிப்பது 253 கழிவு நீரேற்று நிலையங்களிலும் உள்ள அனைத்து தூர்வாரும் இயந்திரங்கள் மற்றும் கழிவு நீரேற்றும் உபகரணங்கள் அனைத்தையும் எந்தவித பழுதும் ஏற்படாமல் எப்போதும் உபயோகிக்கும் நிலையில் தயாராக வைத்திருப்பது குறித்தும் சென்னைக் குடிநீர் வாரிய உயர் அலுவலர்களுடன் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சத்தியபிரத சாகு, இ.ஆ.ப. அவர்கள் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி பருவமழை காலங்களில் நிவாரண பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் அறிவுறுத்தி இருந்தார்கள்.

அதன்படி ஒவ்வொரு பகுதி அலுவலத்திலும் ஒரு கண்காணிப்பு பொறியாளர் மற்றும் ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் கீழ் அந்தந்தப் பகுதிப் பொறியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களைக் கொண்டு பொது மக்களால் தெரிவிக்கப்படும் கழிவுநீர் வழிந்தோடுதல், கழிவுநீர் அடைப்புகள் மற்றும் குடிநீரில் மாசு கலந்து வருதல் போன்ற புகார்களின் மீது முக்கியத்துவ அடிப்படையில் சீரமைப்புப் பணிகள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகளில் எவ்வித தொய்வும் இன்றி அலுவலர்கள் தொடர்ந்து ஈடுபடவும் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

பொதுமக்களின் குறைகளைக் கேட்டு அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் வாரியத்தைச் சேர்ந்த ஒரு உதவி செயற் பொறியாளார் மாற்று முறையில் (ஷிப்ட்) தொடர்ந்து பணியாற்றிடவும் ஒரு உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர் வாரியத்தின் கட்டுப்பாட்டு அறையில் தொடர்ந்து பணியாற்றிடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வாரியத்தின் கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்களிடமிருந்து வரக்கூடிய புகார்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்படும் நடவடிக்கையை கண்காணிக்க ஒரு மேற்பார்வை பொறியாளரை நியமித்து உத்தரவிடப்பட்டிருந்தது.

மிக முக்கியமான சில பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை நடவடிக்கைகளை கண்காணிக்க கண்காணிப்புப் பொறியாளர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

நகரின் பல்வேறு இடங்களில் பழுதடைந்த நிலையில் இருந்த ஆள் நுழை வாயில்களில் மூடிகள் கண்டறியப்பட்டு அவைகள் உடனடியாக மாற்றப்பட்டு புது மூடிகள் போடப்பட்டன.

கழிவு நீரேற்று நிலையங்கள் 24 மணி நேரமும் இயக்கப்பட்டதுடன் மின் தடை ஏற்பட்ட இடங்களில் டீசல் ஜெனரேட்டர்கள் உதவியுடன் கழிவு நீரேற்று நிலையங்கள் தொடர்ந்து இயக்கப்பட்டன.

43 சூப்பர் சக்கர் இயந்திரங்கள் மற்றும் 25 கழிவுநீர் லாரிகள் மூலம் கீழ்கண்ட தாழ்வான பகுதிகளில் உள்ள தேங்கிய மழைநீர் முற்றிலும் அகற்றப்பட்டன. இது தவிர வாரியத்தின் சார்பில் 41 டீசல் மோட்டார்கள் பம்புகள் மூலம் தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரும் அகற்றப்பட்டன.

| | |
|---|---|
| Area 1 | Thiruvottiyur - Amsa Thottam 1st Street, Ondikuppam 2nd Street. |
| Area 2 | 54th Block – 80 feet Road - 73rd Block. |
| Area 3 | Thirumalai Nagar 2nd Street – Arul Nagar 4th Main Road. |
| Area 4 | T.H.Road - Vanniar Street, Vannai Pandian Street - 10th link Street, V.O.C.Nagar, Muthamilz Nagar, West Avenue. |
| Area 5 | Chidambaran Nagar 5th Street, Old Washermanpet , V.O.C.Salai, Park Town - Manikandan 1st Street. |
| Area 6 | Vegavathy Street - Sivarao Road, Mettupalayam Street, Sankaramadam Street. |
| Area 7 | Kamaraj Street, Ambattur - Gandhi Nagar - Oragadam, Kambar Street, Kallikuppam. |
| Area 8 | N.S.K.Nagar 8th Street, Vellalar Street - Collecterate Colony - Periyar Pathai |
| Area 9 | St.Marrys Road, Anderson Road, Lathuram Street, Ellis Road, Mount Road. |
| Area 10 | Othavadai Street, Vadapalani – Pillayar Koil Road, |

Area 11 Arcot Road near Vani Nagar 10th Cross Street, Ganga Nagar – Chowdy Nagar Main Road.

Area 12 Dharmarajan Koil Street, Alandur – TNGO Colony – Teacher Colony – Kumarasamy Street.

Area 13 Ram Nagar – 7th Main Road, - Velachery AGS Colony 4th Main Road, Devi Karumariamman 3rd Street.

Area 14 Saraswathi Nagar Main Road, Saraswathi Nagar 4th Street.

Area 15 8th Main Road – Kannaki Nagar, 12th main Road Kannaki Nagar.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்